மரகத மயில்மேல் வரு முருகா
அரகர சிவசிவ அறு முகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா எம் முன்னே
அரவு அணி சிவனார் அருள் பாலா
பரவ வரம் அருள் பரம தயாளா (மரகத..)

குன்றில் ஆடும் குமரனுக்குக் கோடி கும்பிடு
குழந்தை வடி வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
கந்தசாமிக் கடவுளுக்குக் கோடி கும்பிடு
கருணை வடி வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
அம்பிகையின் பாலனுக்குக் கோடி கும்பிடு
ஆறுமுக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
வள்ளியின் மணாளனுக்குக் கோடி கும்பிடு
வடிவேலன் முருகனுக்குக் கோடி கோடி கும்பிடு
சரவணத்து ஐயனுக்குக் கோடி கும்பிடு
சண்முக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
கோடி கும்பிடு கோடி கும்பிடு (குன்றில்..)

சுப்ரம் மண்யம் சுப்ரம் மண்யம்
ஷண்முக நாதா சுப்ரம் மண்யம்
சிவசிவ சிவசிவ சுப்ரம் மண்யம்
ஹரஹர ஹரஹர சுப்ரம் மண்யம்
குரு சரவணபவ சுப்ரம் மண்யம்
குமர குருபர சுப்ரம் மண்யம்
சிவ சரவணபவ சுப்ரம் மண்யம் (சுப்ரம் மண்யம்)

சிவ குரபர ஹர சுப்ரம் மண்யம்
குருபர ஹரசிவ சுப்ரம் மண்யம்
கூர் வடிவேலா சுப்ரம் மண்யம்
ஓம்ஓம் ஓம்ஓம் சுப்ரம் மண்யம்
ஓங்கார ரூபா சுப்ரம் மண்யம் (சுப்ரம் மண்யம்)

ஓம் சரவணபவ சுப்ரம் மண்யம்
ஒய்யார வேலா சுப்ரம் மண்யம்
கந்தா கடம்பா கருணா கரனே
கதிர் வடிவேலா சுப்ரம் மண்யம்
வருவாய் அருள்வாய் மயில் மேல் அழகா
வடிவேல் அழகா சுப்ரம் மண்யம் (சுப்ரம் மண்யம்)